முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

01.08.2024

1. ஆறுமுகா அரங்கா என அழைக்க
அக்கணமே இரங்கி அருளும்
ஆறுமுக அரங்கன் யானும்
அகிலமதில் ஜீவநாடி வழிதனில்

2. வழிதனில் குருவார அருளாசியாக
வழங்குவேன் என் மக்கள் உயர்வுற
தெளிவுபட நள்ளி திங்கள் குருவாரம்
தொடர்ந்துமே சூல வார ஆசி உரைப்பேன்

3. உரைக்கவே பிரணவக் குடில் நாடி
உயர்வான என் ஜீவதடம்
குறைவிலா ஜோதி வழிபாடு செய்து
குடிலின் அருளமுது உண்டு வர

4. வருபவர்க்கு வறுமை விலகும்
வருங்காலம் சுபிட்சம் ஆகி
தரும குணம் காக்கின்ற வண்ணம்
தனதேட்டு சகல வளம் கூடி

5. கூடியே உலகில் பிறர் மெச்ச
குறை காணா வளம் கூடி
தேடியே மற்றவர்க்கு உதவிடும்
தெய்வ நிலையும் வந்தடையும்

6. வந்தடைய ஞானிகள் பேரிலே
வலுவான பூசைகளும் தொடர
வந்தநல் பிறவி நோக்கமும்
வழிகாட்டலாக அரங்கன் என் அருள்பட

7. அருள்பட தன்வினை வென்றிட
அன்னதான சேவை எனும்
தருமபலம் மகிமை விளங்கி
தக்கபடி பிரணவக்குடிலின்

8. குடிலின் தரும சேவை கலந்து
குறைவிலா பொருளுதவி செய்து
தேடியே பசி பிணி உலகில்
தொடர்ந்து விரட்டும் மகா சக்தியாக

9. ஆகவே சக்தி நிலை கூடிட
அன்னவர்கட்கு கேட்காமலே
மகான் அரங்கன் என்னோடு வேலவன்
மகா ஞானிகள் பலரும் வந்தருளி

10. அருளியே பிறவிப் பிணி அகற்றி
அன்னவர்கள் யாவரும் ஞானிகள் ஆகிட
வரமருளி கலியினில் துணை புரிவோம்
வழங்கிய அரங்க மகான் அருளாசி முற்றே.

–சுபம்–